மின்சாரம் பாய்ந்து தொழிலாளி படுகாயம்: மின்மாற்றிக்கு வேலி அமைக்க கோரிக்கை

சூலூர், ஜூன் 5: சூலூர் அருகே விளம்பரப் பதாகை கட்டும் பணியின்போது மின்சாரம் பாய்ந்து தொழிலாளி படுகாயமடைந்த நிலையில், உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் மின்மாற்றிக்கு வேலி அமைக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோவைமாவட்டம்,சூலூர் அருகேகலங்கள் நான்கு சாலை பகுதியில் விளம்பரப் பதாகைகளை கட்டும் பணியில் அதே ஊரைச் சேர்ந்த ஜாக்கி ஜா (45) ஈடுபட்டிருந்தார். இதற்கிடையே அரசியல் கட்சியின் விளம்பர பதாகையை கட்டும் பணியில் வெள்ளிக்கிழமை காலை ஈடுபட்டிருந்தார். அப்போது அருகில் இருந்த மின் மாற்றியில் இருந்து எதிர்பாராதவிதமாக மின் சாரம் பாய்ந்து ஜாக்கி ஜா தூக்கிவீசப்பட்டு படுகாயமடைந்தார்.

தற்போதுகோவை அரசுமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதே இடத்தில் இதுபோன்று நடைபெற்ற இரண்டாவது விபத்து ஆகும். எனவே, மின்மாற்றியை சுற்றிலும் வேலி அமைத்து பொதுமக்களை பாதுகாக்க மின்வாரியத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பத்தாம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சி: தலைமையாசிரியர்கள் 73 பேருக்கு சான்றிதழ்

கோவை, ஜூன் 5: பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில்கோவைமாவட்டத்தில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 73 பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வெள்ளிக்கிழமை சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார்.

2026-2027 கல்வி ஆண்டில் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 52 அரசுப் பள்ளிகள் மற்றும் 21 அரசு உதவி பெறும் பள்ளிகள் என 73 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கியதுடன், பொன்னாடை அணிவித்து ஆட்சியர் பாராட்டினார்.

பின்னர் அவர் பேசும் போது, 'இந்த தேர்ச்சி விகிதம் அடுத்தாண்டும் தொடர வேண்டும். மேலும், மாணவ, மாணவிகளை 100 சதவீத தேர்ச்சியை நோக்கி முன்னேற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள், பிளஸ் 1 வகுப்பில் சேர்வதை உறுதி செய்ய வேண்டும். 10-ஆம் வகுப்பு முடித்தவர்கள், ஐ.டி.ஐ மற்றும் பாலிடெக்னிக் உள்ளிட்ட படிப்புகளிலாவது சேர்ந்திருப்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

குடும்பச் சூழல், பொருளாதார நிலை, படிப்பில் ஆர்வமின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உயர்கல்வியைத் தொடர முடியாத நிலை இருப்பின், அவர்களை அடையாளம் கண்டறிந்து உரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கி உயர்கல்வியைத் தொடர ஊக்குவிக்க வேண்டும்' என்றார்.

இந்தநிகழ்வில், உதவி ஆட்சியர் (பயிற்சி) துஷார் சிங், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலமுரளி மற்றும் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கிய ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர்.

இன்றைய மின்தடை: மதுக்கரை

கோவை, ஜூன் 5: மாதாந்திர பராமரிப்புப் பணிகள் காரணமாக மதுக்கரை துணைமின் நிலையத்துக்குள்பட்ட க.க.சாவடி, பாலத்துறை, புறவழிச்சாலை, சாவடிபுதூர், காளியாபுரம், எட்டிமடை, எம்ஜிஆர் நகர், சுகுணாபுரம், பி.கே.புதூர், மதுக்கரை, அறிவொளி நகர், கோவைப்புதூர் (ஒரு பகுதி) ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (ஜூன் 6) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பீளமேட்டில் தொடர் மின்வெட்டு: ஆட்சியரிடம் புகார்

கோவை, ஜூன் 5: கோவை மாநகர், பீளமேடு பகுதியில் தொடர் மின்வெட்டால் மக்கள் அவதிக்குள்ளாவதாக புகார் எழுந்துள்ளது.

கோவை மாநகராட்சிக்குள்பட்ட உக்கடம், செல்வபுரம், சரவணம்பட்டி, கணபதி, சிங்காநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாள்களாக அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், பீளமேடு பகுதியில் தொடர் மின்வெட்டால் மக்கள் அவதிக்குள்ளாகி வருவதாக புகார் எழுந்துள்ளது.

இதுதொடர்பாக மாநகராட்சியின் 26-ஆவது வார்டு உறுப்பினர் சித்ரா வெள்ளிங்கிரி,மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவருக்கு அனுப்பிய மனுவில்,'பீளமேடுபகுதியில் எல்லைத்தோட்டம் சாலை,பட்டாளம்மன் கோயில் வீதி, ராமசாமி லே-அவுட் உள்ளிட்ட பகுதிகளில் பிற்பகல் நேரத்தில் மின்வெட்டு ஏற்பட்டு மாலை நேரம்தான் மின்சாரம் வருகிறது. இரவில் 12 மணிக்கு மேல் மின்வெட்டு ஏற்படுகிறது. இதனால், அப்பகுதி மக்கள் இரவில் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பீளமேடு பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

பிராந்திய அலுவலகம் :
SIB பில்டிங், இன்ஃபோபார்க் ரோடு, ராஜகிரி வேலி அஞ்சல், காக்கநாடு, எர்ணாகுளம், கேரளா – 682039. போன் : 0484-2771361, 2771363, 2771369
E-mail : ro1003@sib.bank.in

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6(2) உடன் கீழ், அசையும் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

1. M/s. லெனோரா குளோவ் பிரைவேட் லிமிடெட், பதிவு முகவரி : எண்.32/1764, என்ஜாவல்லில், சிவில் லேன் ரோடு, பாலாரிவட்டம், எர்ணாகுளம், கேரளா – 682 024. **மேலும் :** எண்.15/104-1, ரொட்டிகவுண்டனூர் ரோடு, திருமலையம்பாளையம் அஞ்சல், K.G. சாவடி, மதுக்கரை வழி, கோயம்புத்தூர் – 641 105. **2. M/s. என்ஜாவல்லில் லேடெக்ஸ் பிரைவேட் லிட்.,** பதிவு அலுவலகம் : என்ஜாவல்லில், காரூர் அஞ்சல், பாலா, கேரளா – 686 590. **மேலும் :** கதவு எண்.32/1764, என்ஜாவல்லில், சிவில் லேன் ரோடு, பாலாரிவட்டம், கொச்சி, கேரளா – 682 025. **மேலும் :** 18/631A,B,C, எடயார், பினானிபுரம் அஞ்சல், ஆலுவா, எர்ணாகுளம், கேரளா – 683 502. **3. திரு.அந்தோணி குரியன் (பங்குதாரர் : M/s. சேண்ட் டியூன்),** என்ஜாவல்லில் ஹவுஸ், கலாவத் ரோடு, பாலாரிவட்டம், கொச்சி, எர்ணாகுளம், கேரளா – 682 025. **மேலும் :** வீட்டு எண்.32/1862, 'என்ஜாவல்லில்', சாத்தங்காட்டு ரோடு, பாலாரிவட்டம் அஞ்சல், எடப்பள்ளி தெற்கு கிராமம், கணையன்னூர் தாலூகா, எர்ணாகுளம் மாவட்டம் – 682 025. **4. திருமதி. ரோஸ் நோரா அந்தோணி (பங்குதாரர் : M/s. சேண்ட் டியூன்),** என்ஜாவல்லில் ஹவுஸ், கலாவத் ரோடு, பாலாரிவட்டம், கொச்சி, எர்ணாகுளம், கேரளா – 682 025. **மேலும் :** வீட்டு எண்.32/1862, 'என்ஜாவல்லில்', சாத்தங்காட்டு ரோடு, பாலாரிவட்டம் அஞ்சல், எடப்பள்ளி தெற்கு கிராமம், கணையன்னூர் தாலூகா, எர்ணாகுளம் மாவட்டம் – 682 025. **5. M/s. என்ஜாவல்லில் கிரீன் ஏக்கர்ஸ் பிரைவேட் லிமிடெட்,** பதிவு முகவரி : எண்.32/1764, என்ஜாவல்லில் பில்டிங்ஸ், சிவில் லைன் ரோடு, பைப் லைன், பாலாரிவட்டம், கொச்சி, எர்ணாகுளம், கேரளா – 682 025. **6. M/s. சாண்ட்டியூன் (பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள்),** எண்.32/1764, பைப் லைன் ரோடு, பாலாரிவட்டம், எடப்பள்ளி, எர்ணாகுளம், கேரளா – 682 024. **7. திரு. ஜெஜி ஜோசப் (பங்குதாரர் : M/s. சாண்ட்டியூன்)** எண்.32/1764, பைப் லைன் ரோடு, பாலாரிவட்டம், எடப்பள்ளி அஞ்சல், எர்ணாகுளம், கேரளா – 682 024. **மேலும் :** என்ஜாவல்லில் ரிவர் வாக் வில்லா, சாலிக்காவட்டம், கொழுவேல் கோவில் அருகில், எர்ணாகுளம், கேரளா – 682 028.

இதனால் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் தெரிவிப்பது என்னவென்றால், **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., MG ரோடு எர்ணாகுளம் கிளை** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) கீழே குறிப்பிட்டுள்ள, அடமானப்படுத்தப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை, கொள்நிலை கவாதீனம் (Physical Possession) மேற்கொண்டவற்றை **தி சௌத் இந்தியன் வங்கி லிட்.,** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் **"எங்கு உள்ளதோ அங்கு" "என்ன உள்ளதோ அது" "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., MG ரோடு எர்ணாகுளம் கிளைக்கு** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) வரவேண்டிய **01.06.2026** அன்றைய தேதி வரையான நிலுவைத் தொகை **ரூ.17,17,27,734.65 (ரூபாய் பதினேழு கோடியே பதினேழு லட்சத்து இருபத்து ஏழாயிரத்து எழுநூற்று முப்பத்து நான்கு மற்றும் பைசா அறுபத்து ஐந்து மட்டும்)** மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை மேலே குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்)களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு **24.06.2026** அன்று விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்.

சொத்தின் உரிமையாளர் பெயர்	M/s.லெனோரா குளோவ் பிரைவேட் லிமிடெட்
அசையும் சொத்து விபரம்	இயந்திரங்களின் விபரம் :

1.DIPPING PLANT MACHINERIES: Latex dipping plant including 2 Dip line fabricated with MS channels and structures excluding chain formers tanks and other peripherals, fabricated, painted with enamel paint. **2.GLOVE LINE MOTORS: i)** Motor from 5HP to 11HP - 22 Nos., **ii)** Motor from 0.5HP to 1HP - 20 Nos., **iii)** Frames, Supporting Structures, Tank motors with reduction gear - 6Nos. **3.** Glove line complete accessories & Holders for the glove lines. **4.TANKS FOR A&B LINE & OTHERS: i)** Acid tank, capacity: 2900 Lt -2 Nos. **ii)** Rinse tank-1&2, Capacity:1800L-4 Nos. Size: 2.1mLx1.5mEWx0.56mH **iii)** Hot water tank (Rinse tank-3), Capacity: 2900 Lt-2 Nos. Size: 2.8mLx1.9mEWx550mH **iv)** AFC tank, capacity: 1800 Lt -2 Nos. Size: 2.1mLx1.5mEWx0.56mH **v)** Alkali tank 1800 Lt -2Nos. Size: 2.1mLx1.5mEWx0.56mH **vi)** Circular brush tank 1800 Lt Size: 2.1mLx1.5mEWx1.1mH **vii)** Drying oven for A & B Line – 2Nos Size: 2 x 3(L) **viii)** Coagulant dip tank 2150Lt Size: 4.8mLx0.8mEWx0.56mH **ix)** Dope oven (coagulant oven) with 90oC eco flame, 7.5HP blower, heated by LPG with accessories. **x)** Latex dipping tank, capacity: 3840 Lt-2 Nos. Size: 6mx1.5mx0.6m **xi)** Gelling oven 100oC LPG burner operated, 7.5HP blower and accessories. Size: 9m (L) & 2m **xii)** Beading station with 1HP motor, roller brush 2Nos for left and right with accessories. **xiii)** 1. Pre-Leaching tank, capacity: 2700 Lt- 4Nos. **5.** Post Leaching tank, capacity: 2700 Lt- 4Nos. Size: 6mLx0.8mEWx0.56mH **xiv)** Polymer tank, capacity:1800Lt-2Nos. Size: 2.0mtsLx1.5mtsWx0.6mtsH **xv)** Powder tank (Slurry tank), Capacity:1650 Lt-2 Nos. Size: 2mtsLx1.5mtsWx0.55mtsH **xvi)** Post leaching tank 1 & 2 for Line A & Line B – 4Nos. **xvii)** Compounding tank-1 & 3 with agitator. Capacity: 3500Lt - 2 Nos. **xviii)** Compounding tank-2 & 4 with Vertical Tanks – 2Nos. agitator. (Double layer) Capacity: 8500Lt - 4 Nos. dia - 2m, Ht - 3m, thickness - 4mm with chemical mixing tank – 4Nos. with 2HP motor, Pear Mill with 7.5HP motor. **6.LPG GAS BURNER & HEATING CHAMBER:** (All the tanks are made from SS304 material with accessories except Acid tank.LPG heating system fabrication and installation including gas units burners, stand, structures and other brought out equipments and spares. (For both lines) Imported Infra Red burner for rinsing tank – 3Nos, Alkali, acid tank, leaching tank – 4Nos for single line. 126 Nos (63 x 2 = 126Nos for both line) for heating of water. Capacity: 10,000 **7.STRIPPING MACHINE: (IMPORTED)** Automatic stripping (Robotic) machine with conveyor, pneumatic system and accessories. S. No: 2590, Ref No: JA42P **8.ETO GAS STERILIZATION MACHINE:** With ethylene gas, hot water tank, pump with motor, auto clave 1No and accessories Chamber size: 1.35 x 1.5 x 7.4Mtr Capacity: 15m3 **9. FORMERS & HOLDERS: (IMPORTED) i)** Surgical formers Approx :15150 Nos (Right & Left) 5.5" to 9" Size Size: 5.5", 6", 6.5", 7", 7.5", 8", 8.5", 9" **ii)** Examination formers Approx:8000 No, (Small, medium Land), 1400+5200+1400) 500metres Chain conveyor for the dipping line, 15HP motor each and accessories - 2Set. **iii)** Former holders – 9800Nos. 4800 (Left & Right for ondine) **10. PACKING SECTION:** Pouch Packing Machine: 4 Nos With 3HP motor and accessories. Packing Roll Printing Machine: 1 No With 3HP motor and accessories. **11.** Forklift: 1 No (Scrap) Capacity: 3Tons, SL. No.: NA **12.** Wrapping Machine: 1 No With 0.5HP motor and accessories. Type: FLCW **13.** Carton Sealing Machine: 1 No With 0.2KW motor and accessories. **14.** Hand Sealer Machine: 9 Nos **15.** Ink Coding Machine: 2Nos Make: Seapack - 3Nos, Fine pack -1No. **16.** Tables – 8Nos (Size: 4 x 8Ft) **17.** Steel rack – 2No **18.** Weighing scale – 1No **19.** Plastic Crates **20.** Plastic Stool - **21.** Model water chiller unit with 2 compressors, 6 fans and accessories. **22.** Chiller water tanks. **23** Fans and accessories. Capacity: 60000Kcal/Hr, SL. No.: 830 **24.** Air Conditioner – 2Sets: Make: Blue Star, Model: XAC2S-010 SL. No.: 2195-H06, Capacity: 10TR **25. SUPPORTING FACILITIES:** Volvo Penta make 250KVA engine with Stamford alternator with batteries and accessories. DG Set (Scrap Condition) Engine with Alternator without acoustic. 500 KVA Transformer: With OLTC SL. No.: ET2 – 2873 **26.** Air compressor with 10HP motor and accessories. **27.** Elgi make Air compressor with 15HP motor and accessories. **28.** Air compressor with motor and accessories (Approximately motor30HP Power). **29.** 2000 Litre air receiver tank. **30.** Water filter and softener with panel board. **31.** 60Ton capacity weigh bridge with computer 2Set, printer 1No with racks. Small scales stored at weigh bridge room. **32.** Steel Bero – 1No, Table – 2Nos, Chair – 3Nos, Fan – 1No, Steel Rack –2Nos, Pump – 1No, Bag closer - 1No. **33.** Diaphragm pump for latex pumping. **34.** Tumbling machine for gloves and curing – 3Nos. **35.** Bore well with 7.5HP motor x 2No, 10HP motor x 1No **36.** Chemical store racks – Lot **37. LAB & TESTING EQUIPMENTS (Ground Floor): 38.** Tensile testing machine (KMI) **39.** Viscometer , Auto clave **40.** Material Stability Testing Machine: **41.** Hot Air Oven: Make: KEMI (Ageing Oven) **42.** Tumble Cutter Machine: **43.** Incubator & Spectro photo Meter: **44.** Water bath & Refrigerator: **45.** Air conditioner 1Ton – 1No (Cruise) **46.** Magnetic Stirrer – 1No **47.** Computers – 3Sets **48.** Lable Printer – 1No **49.** Steel Rack – 1No **50.** Computer – 1Set **51.** HP Laser printer – 1No **52.** Rolling Chair – 5Nos. **53.** Table – 2Nos. **54.** Ceiling Fan – 6Nos. **55.** Kitchen with blower and chimney (Ground Floor) **56.** Packing machine – 9Nos **57.** Table – 21Nos(Size: 4 x 8Ft) **58.** Table - 7Nos (Size: 4 x 4Ft) **59.** Steel Bero – 1No **60.** Steel Locker – 1No **61.** DVR – 4Nos. (Video Recorder) **62.** Computer – 1No **63.** UPS – 1No, Battery – 2Nos. **64.** Air conditioner – 3Nos **65.** Fan – 6Nos **66.** Tables, Executive chairs, tea poy, wooden chair, cupboard – 1No, Office cubicals – 1Full Set, Steel bero – 1No, Wooden Bero – 1No. **67.** Ceiling Fan – 10Nos. kRO Plant small – 1No with 1000Litre water storage PVC tank – 1No **68.** Steel Cot – 1No, Wire cot – 15Nos. **69.** Washing machine & Fridge **70.** RM Stores: (New Entrance) Scrap Pouch rolls, Roll packing machine with motor & accessories, Racks – Lot, PVC Pallets. **71.** Maintenance Room: Motors, Gear box, Tools, spares, pumps, hand drilling machine. Security Room: **72.** Fan- 2Nos, Biometric machine - 1No **73. ETP SECTION:** Clarifier scrapper with 5HP motor, Water softner with 2Pumps each 2HP, Sintex tank with agitator 1HP motor, Clarifier – II with agitator 3HP with gearbox, Water pump with 12 switches, collection tank with 5HP motor, Softner – II with 1HP motor, Pressure pump with 0.5HP motor. **74. JUMBO GAS SHED: 75.** Scissor Lift – 1No. (Small) **76.** Gas (LPG) Vaporizer – 2Nos (Provision for eight cylinder & pipelines with gauges and accessories.) **77.** Packing Unit – 1No (Small) **78.** Blue Star air cooler – 3Nos **79.** Capacity: 16,500Kcal/Hr. ELECTRICALS: MV Panel boards, Control panels, APFC panel, Switches 9Nos, RTCC Panel, MLSB, 800Amps ACB, DG Panel, UG Cables, Wires, Bus bars and all electrical items

ரிசர்வ் விலை	**ரூ.2,68,45,000/–** (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து எட்டு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	**ரூ.26,84,500/–** (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும்) **முன்வைப்புத் தொகையை 23.06.2026 அன்று மாலை 5.00 மணிக்கு முன்பாக செலுத்தவேண்டும்**
ஏலக் கேட்பு மடங்கு	ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)/விற்பனைத் தொகை சமர்ப்பிக்கும் முறை	முன் வைப்புத் தொகை (EMD) மற்றும் விற்பனை தொடர்புடைய அனைத்துத் தொகைகளும் எர்ணாகுளத்தில் மாற்றத்தக்கதான "அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், தி சௌத் இந்தியன் பேங்க் லிட்" என்ற பெயருக்கு கேட்பு வரைவாகச் செலுத்தவும், அல்லது எர்ணாகுளம் மார்க்கெட் சாலையிலுள்ள தி சௌத் இந்தியன் பேங்க் லிட் –ன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரது பெயரிலுள்ள கணக்கு எண். 0024073000025480 –ல் RTGS வழியில் செலுத்தப்படவேண்டும் (IFSC குறியீடு : SIBL0000024)
சொத்தினைப் பார்வையிடல்	மதியம் 02.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை, வேலை நாட்களில், முன் அனுமதியின் பேரில்.
விற்பனைத் தேதி மற்றும் நேரம்	**24.06.2026 காலை 10:30 மணி முதல் காலை 11.00 மணி வரை.** (ஏலம் நிறைவு பெறும் வரையிலான 5 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புகளுடன்)
மின் ஏலத்தின் சேவையாளர்	M/s. 4 குளோசர் அலுவலக முகவரி : எண்.605 A, 6வது தளம், மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஹைதராபாத், தெலங்கானா – 500 038. அலுவலக மின்னஞ்சல் : info@bankauctions.in இணையதளம் : https://bankauctions.in
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம்	வங்கி அறிந்த வரையில் பிணையச் சொத்துக்களின் மீது எந்த விதமான வில்லங்கங்களும் இல்லை.

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு சௌத் இந்தியன் பேங்க் லிட்–டின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) இணையதள (i.e. **www.southindianbank.com**) போர்டலின் 'லிங்க்'கில் பார்வையிடவும்.
விபரங்களை **https://bankauctions.in/** இணையதளத்திலிருந்தும் பெறலாம்.
சொத்தினைப் பார்வையிடுதல் குறித்த விபரங்களுக்கு, மின் ஏலத்தின் நிபந்தனை விபரங்களுக்கு அல்லது ஏலக் குறிப்பீடு சமர்ப்பித்தல் விபரத்திற்கு சௌத் இந்தியன் பேங்க் லிட்–ஐத் தொடர்பு கொள்ளலாம். (மொபைல் எண்கள் 8593991578, 8921429332)

தேதி : 02.06.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

சரவணம்பட்டி அருகே இளைஞர் தற்கொலை

கோவை, ஜூன் 5: கோவை மாநகர், சரவணம்பட்டி அருகே கடந்த சில நாள்களுக்கு முன்பு தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றப்பட்ட இளைஞர், மீண்டும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

கேரள மாநிலம், பாலக்காடு அருகே உள்ள ஸ்ரீகிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்தவர் கோபாலகிருஷ்ணன். இவரது மகன் ஸ்ரீஜித் (33). இவர், கோவை சரவணம்பட்டியை அடுத்த சின்னவேடம்பட்டி, சக்தி நகர் பகுதியில் உள்ள பிளாஸ்டிக் வயர் மற்றும் பைப்கள் தயாரிக்கும் தனியார் நிறுவனத்தில் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார்.

இந்நிலையில், கடந்த 3-ஆம் தேதி தான் தங்கியிருந்த அறையில் ஸ்ரீஜித் திடீரென தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இதுகுறித்து தகவலறிந்து சரவணம்பட்டி போலீஸார் சென்று ஸ்ரீஜித்தின் சடலத்தை மீட்டு கூறாய்வுக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதில் ஸ்ரீஜித்தின் நண்பர் ஒருவர் பணப் பிரச்னையில் சிக்கித் தவித்து வந்ததாகவும், அதுகுறித்து ஸ்ரீஜித் தொடர்ந்து மனவருத்தத்துடன் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும், மதுப்பழக்கத்துக்கு அடிமையான ஸ்ரீஜித் கடந்த மாதம் 31-ஆம் தேதியே தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் ஏற்பட்டு, தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். அப்போது அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு காப்பாற்றியுள்ளனர்.

எனினும், தொடர்ந்து மன உளைச்சலில் இருந்த ஸ்ரீஜித், மீண்டும் யாரும் இல்லாத நேரத்தில் தற்கொலை செய்துகொண்டது தெரியவந்தது.

சிறையில் காவலரைத் தாக்கிய கைதிகள் இருவர் மீது வழக்கு

கோவை, ஜூன் 5: கோவை மத்திய சிறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிறைக் காவலரைத் தாக்கிய ஆயுள் தண்டனை கைதிகள் இருவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோவை மத்திய சிறையில் தண்டனை கைதிகள், விசாரணை கைதிகள் என 2,500-க்கும் மேற்பட்டோர் தனித்தனி பிளாக்குகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், சிறையின் 29-ஆவது பிளாக் பகுதியில் உள்ள விடியோ கோர்ட் அறை அருகே அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் பகுதியைச் சேர்ந்த ஜெயமணிகுமார் (எ) ஜெயமணி (31), திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி பகுதியைச் சேர்ந்த ஆனந்த் (28) உள்பட ஆயுள் தண்டனை கைதிகள் சிலர் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு மற்றொரு கைதி தனது வழக்குரைஞருடன் பேசிக் கொண்டிருந்ததை இந்த கைதிகள் ஒட்டுகேட்பது போல அருகில் நின்று கவனித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதைப் பார்த்த அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிறைக் காவலர் வெள்ளைப்பாண்டி என்பவர், முதன்மை வாயில் அருகே உள்ள வழித்தடத்தை மறிக்காமல் கைதிகளை சற்று தள்ளி நிற்குமாறும், அங்கிருந்து விலகிச் செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ஜெயமணி, ஆனந்த் உள்ளிட்ட கைதிகள், காவலர் வெள்ளைப்பாண்டியை அவதூறாகவும், ஆபாச வார்த்தைகளாலும் பேசி மிரட்டியுள்ளனர். மேலும், கண் இமைக்கும் நேரத்தில் காவலரிடம் இருந்த வாக்கிடாக்கியைப் பிடுங்கி, அ வரைக் கொடூரமாகத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் காவலர் வெள்ளைப்பாண்டியின் நெற்றி, தலை மற்றும் முதுகுப் பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டது.

அவரது அலறல் சப்தம் கேட்டு அங்கிருந்த மற்ற சிறைக் காவலர்கள் விரைந்து வந்து வெள்ளைப்பாண்டியை மீட்டனர். மேலும் தாக்குதலில் ஈடுபட்ட கைதிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

காயமடைந்த காவலர் வெள்ளைப்பாண்டிக்கு முதலில் சிறை வளாக மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து சிறை காவல் கண்காணிப்பாளர் தாமரைக்கனி அளித்த புகாரின்பேரில், அரசு ஊழியரைப் பணி செய்யவிடாமல் தடுத்தல், கடுமையான ஆயுதங்களால் தாக்குதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் கைதிகள் மீது வழக்குப் பதிவு செய்து ரேஸ்கோர்ஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அஜய் சர்மா விசாரணை நடத்தி வருகிறார்.

இதற்கிடையே, தாக்குதலில் ஈடுபட்டகைதிகளை பாதுகாப்புக் காரணங்களுக்காக வேறு சிறைகளுக்கு மாற்ற சிறைத் துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க...

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தினமணி நாளிதழ், சரவணம்பட்டி தவத்திரு கந்தசாமி சுவாமிகள் மெட்ரிக்.மேல்நிலைப் பள்ளி ஆகியவை இணைந்து மாணவ – மாணவிகளுக்கு விதைப்பந்து தயாரிக்கும் பயிற்சி முகாமை நடத்தின. இதில், சுற்றுச்சூழல் ஆர்வலர் ஷர்வேஸ் ரகுபதி பங்கேற்று பயிற்சி அளித்தார்.

வாகன ஓட்டிகளுக்கு இடையூறாக சுவரொட்டிகள் ஒட்டிய தனியார் நிறுவனத்துக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிப்பு

கோவை, ஜூன் 5: கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலத்துக்குள்பட்ட போத்தனூர் ரயில் நிலையம் அருகில் உள்ள மேம்பாலப் பகுதியில் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் விளம்பர சுவரொட்டிகள் ஒட்டிய தனியார் நிறுவனத்துக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023-ன் படி, மாநகரில் விளம்பர பலகை, மின்னணு திரை மற்றும் விளம்பர அட்டை ஆகியவற்றில் விளம்பரம் செய்ய மாநகராட்சி நிர்வாகத்தில் 15 நாள்களுக்கு முன்பாக விண்ணப்பித்து, அதற்குரிய தொகையை செலுத்தி அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

கோவை மாநகராட்சிக்குள்பட்ட 5 மண்டலங்களிலும் மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அனுமதியின்றி பொது இடங்கள், சாலையின் மையத் தடுப்புகள் மற்றும் மின்கம்பங்கள் ஆகியவற்றில் விளம்பரப் பலகைகள், பிளக்ஸ் மற்றும் விளம்பர சுவரொட்டிகள், பேனர்கள் வைத்தால், மாநகராட்சி நிர்வாகம் மூலமாக உடனடியாக அவை அகற்றப்படுவதுடன், தொடர்புடைய நபர்களுக்கும் அபராதம் விதிக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேலிக், டாக்டர்.பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறி